# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | சிவகங்கை | காலம் : | 02/05/2018 | முதல் | 06/05/2018 |
| அறிக்கை எண் : | 034/2018 | வெளியீட்டு நாள் : | 01/05/2018 | | |

| கடந்த கால வானிலை 27/04/2018 முதல் 30/04/2018 வரை | |
|---|---|
| காரணிகள் | கடந்த கால வானிலை |
| மழை (மி.மீ) | 1.8 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 37-39 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 26-27 |
| மேக மூட்டம் | 4-6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 37-66 |
| காற்றின் வேகம்(கி.மீ. / மணி) | 6-12 |

எதிர்பார்க்கப்படும் வானிலை 06-05-2018 8.30 மணி வரை )

| காரணிகள் | 02-05-2018 | 03-05-2018 | 04-05-2018 | 05-05-2018 | 06-05-2018 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 5 | 6 | 10 | 11 | 22 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 39 | 39 | 39 | 40 | 40 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 27 | 27 | 27 | 28 | 28 |
| மேக மூட்டம் | 4 | 4 | 4 | 4 | 4 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 65 | 65 | 65 | 65 | 65 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 40 | 40 | 40 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 8 | 8 | 8 |
| காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு |

**குறுஞ்செய்தி :**

வரும் 2, 3ம் தேதிகளில் லேசான மழையும், 4, 5 மற்றும் 6ம் தேதிகளில் ஒரு சில இடங்களில் மிதமான மழையும் பெய்வதற்கான வாய்ப்புள்ளது. வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 கி.மீ வேகத்தில் தெற்கு திசையில் காற்று வீசக்கூடும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : கத்தரி & (கால்நடை)**

தற்போது நிலவும் கோடை காலத்தில் கத்தரிபயிரில் வெள்ளை ஈக்களின் தாக்குதல் அதிகமாக இருக்கும். இதனைக் கட்டுப்படுத்த மஞ்சள் நிற ஒட்டும் பசை அட்டைப்பொறி எக்டருக்கு 12 வீதம் வைக்கவேண்டும். வேப்பெண்ணெய் 3 மில்லியுடன் 1 லிட்டர் நீர் கலந்து, அதனுடன் டீப்பால் என்ற ஒட்டும் திவரம் 1 மில்லியுடன் ஒரு லிட்டர் தண்ணீர் கலக்கப்பட்ட கலவையுடன் சேர்த்து தெளிக்கவேண்டும்.

அதிகபட்ச வெப்பநிலை தொடர்ந்து உயர்வாக காணப்படுவதால் கால்நடைகளுக்கு நாள் ஒன்றுக்கு 80 முதல் 100 லிட்டர் தண்ணீரை 4 தவணையாக பகிர்ந்து கொடுக்கவும்.